*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*01 10 2025 WEDNESDAY 7.15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு இந்தியா தேவையான உதவிகளை வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*2. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் பாதுகாப்புத் தளவாட கொள்முதலில் சீரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.*

*3. நாடுமுழுவதும் 57 புதிய கேந்திரிய வித்யாலய பள்ளிகளை திறப்பதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.*

*4. அஸ்ஸாம் மாநிலம் Kalibor – Numaligar இடையே நான்குவழிப் பாதை அமைக்கும் திட்டத்தால் தொழில் மற்றும் சுற்றுலா வளர்ச்சி பெறும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*5. எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் முகுந்த் சசிகுமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தால் உயிரிழந்த மக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் குடும்பத்தினரை இழந்து வாடுபவர்களுக்கு தமது ஆறுதலை தெரிவிப்பதாகவும், அவர்களுக்காக பிரார்த்தனை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வேண்டும் என கூறியுள்ள பிரதமர், பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்தியா துணை நிற்கும் என்று கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் பாதுகாப்புத் தளவாட கொள்முதலில் சீரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று பாதுகாப்புத்துறை கணக்கு தின விழாவில் பேசிய அவர், வரி விகிதங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதால், கொள்முதலும் அதிகரித்திருப்பதாக அவர் கூறினார்.*

*நாட்டில் ஆக்கத்திறன் மிகுந்த புதுமையான தொழில்நுட்ப கட்டமைப்பு உருவாகியிருப்பதால், பாதுகாப்புத் துறை ஆராய்ச்சிப் பணிகளும் மேம்பட்டிருப்பதாக தெரிவித்தார்.*

*பாதுகாப்புத் துறை பட்ஜெட்டின் அரணாக கணக்குகள்துறை விளங்குவதாக கூறிய அமைச்சர், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கான ஒதுக்கீடுகளை செய்வதற்கும், அதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்கித் தருவதற்கும் கணக்குகள் துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.*

*ஓய்வு பெற்ற வீரர்களுக்கு, ஓய்வூதியம் மற்றும் அவர்களுக்கான நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதிலும் கணக்குகள் துறை அரும்பணி ஆற்றிவருவதாகவும் அவர் கூறினார்.*

*போர் ஏற்படும் சூழ்நிலையில் அதற்கான ஆயத்தப் பணிகளை விரைந்து மேற்கொள்வதற்கு உதவிகரமாகவும் இந்த துறை திகழ்வதாக அவர் தெரிவித்தார்.*

*ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, கணக்குகள் துறை பேருதவியாக இருந்தது என்றும் அவர் கூறினார்.*

*முப்படைகளுக்கு கிடைத்த வெற்றியில், பாதுகாப்பு கணக்குகள் துறைக்கும் பங்கு உண்டு என திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*நாடுமுழுவதும் 57 புதிய கேந்திரிய வித்யாலய பள்ளிகளை திறப்பதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.*

*இக்கூட்டத்திற்குப் பின், செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இதற்கென 5 ஆயிரத்து 862 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.*

*இதுவரை, கேந்திரிய வித்யாலய பள்ளிகள் இல்லாத மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில். அம்மாவட்டங்களில் 20 கேந்திரிய வித்யாலய பள்ளிகள் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.*

*முன்னேற விளையும் மாவட்டங்களில் 14 கேந்திரிய வித்யாலய பள்ளிகளும், வடகிழக்கு மாநிலங்களில் 5 பள்ளிகளும், நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நான்கு பள்ளிகளும் தொடங்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.*

*புதிதாக தொடங்கப்படவுள்ள 57 கேந்திரிய வித்யாலய பள்ளிகள் மூலம். 87 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும், 4 ஆயிரத்து 600 ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக உருவாகும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.*

*புதிதாக 57 கேந்திரிய வித்யாலய பள்ளிகள் தொடங்குவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை வரவேற்பதாக கூறியுள்ள தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், நாட்டின் ஒட்டுமொத்த கல்வித்தரத்தை உயர்த்தும் முயற்சி இது என்று பாராட்டியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*வரும் ஐந்தாண்டுகளில் பருப்பு வகைகள் உற்பத்தியில், தன்னிறைவை எட்டுவதற்கான இயக்கத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 2030-31ஆம் ஆண்டுக்குள் பருப்பு வகைகளின் உற்பத்தியை 350 லட்சம் டன்னாக உயர்த்தும் நோக்கில், அதன் உற்பத்திக்கான தன்னிறைவு இயக்கத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

*இந்த இலக்கை எட்டுவதற்கு, 11 ஆயிரத்து, 400 கோடி ரூபாய் முதலீடு செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டது.*

*பருப்பு உற்பத்திக்கான சுயசார்பு இயக்கத்தின் மூலம். 2 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு தரமான விதைகள் அறுவடைக்குப் பின் கொள்முதல் செய்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் பணிகளும் இந்த இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.*

*புதிய நவீன ரக பருப்பு வகைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 88 லட்சம் இலவச விதைப் பை-களை வழங்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.*

*அறுவடைக்குப் பின் இழப்பு ஏற்படுவதை தடுப்பதற்காக ஆயிரம் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.*

*துவரை, உளுந்து, மசூர் ஆகிய பருப்பு வகைகளை விவசாயிகளிடமிருந்து, வரும் நான்காண்டுகளுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையில் 100 சதவீதம்*

கொள்முதல் செய்யும் பணியும் இந்த இயக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

2026-27ஆம் ஆண்டு சந்தைப் பருவத்தில், குறிப்பிட்ட ராபி பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

சூரியகாந்தி குவிண்டாலுக்கு 600 ரூபாயும், மசூர் பருப்பிற்கு குவிண்டாலுக்கு 300 ரூபாய் வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 715-ல் Kalibor – Numaligar பிரிவை நான்குவழிப் பாதையாக விரிவுபடுத்துவதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

85 கிலோமீட்டர் தூரமுள்ள இந்த சாலை 6 ஆயிரத்து 957 கோடி ரூபாய் செலவில் நான்குவழிச் சாலையாக தரம் உயர்த்தப்படவுள்ளது.

இந்த நான்குவழிப் பாதை திட்டம், அஸ்ஸாம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிடும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதன்மூலம், குவஹாத்தி, காசிரங்கா, Numaligar பகுதிகளில் சுற்றுலாவை மேம்படுத்தும் என்றும் அப்பகுதியில் தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகள் பெருகிடும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

விஜயதசமி நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில், அதர்மத்தை தர்மம் வென்றதன் அடையாளமாக திகழும் இந்த பண்டிகை, மக்களை உண்மை மற்றும் நீதி வழியில் கொண்டு செல்லும் திருநாளாகவும் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நீதி, சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்துடன் மக்கள் இவ்விழாவை கொண்டாடி மகிழ வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, விமானப் படையின் வீர தீர செயல்பாடுகள் குறித்து, Swapnil Pandey எழுதிய Wing of Valour என்ற புத்தகத்தை விமானப்படை தளபதி ஏர்சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் இன்று வெளியிட்டார்.

அப்போது பேசிய அவர், விமானப்படையின் சிறப்பான செயல்பாடுகளையும், குறித்த நேரத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விமானப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கை குறித்தும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

>>>>>><<<<<<

ஐ.நா. பாதுகாப்பு படைகளின் தலைவர்கள் மாநாடு இம்மாதம் 14முதல் 16ஆம் தேதிவரை புதுதில்லியில் நடைபெறுகிறது.

இந்திய ராணுவம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில், ஐ.நா பாதுகாப்பு படைக்கு குழுக்களை அனுப்பியுள்ள 30-க்கு மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்கிறார்கள்.

ஐ.நா பாதுகாப்புப் படைகள், அமைதி காக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<

உலக பசுமை பொருளாதார உச்சி மாநாடு இன்று துபாயில் தொடங்கியது.

அங்குள்ள உலக வர்த்தக மையத்தில் தொடங்கியுள்ள இந்த இரண்டு நாள் உச்சி மாநாட்டில், 30க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

பசுமை பொருளாதாரத்திற்கான திட்டமிடுவோர், வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் புதுமை படைப்பாளர்கள் இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

>>>>>><<<<<<

எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் முகுந்த் சசிகுமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 7-5, 6-3 என்ற செட்கணக்கில் இத்தாலியின் Lorenzo Lorusso-வை வென்றார்.

>>>>>><<<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Dakshineshwar Suresh – அமெரிக்காவின் Andrew Delgado இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-6 என்ற செட்கணக்கில் Ghana-வின் Abraham Asaba – அமெரிக்காவின் Alafia Ayeni இணையை வென்றது.

>>>>>><<<<<<

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Rohan Kapoor – Ruthvika Shivani Gadde இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-12 என்ற செசட்கணக்கில் Vimalraj Annadurai – Shreya Balaji இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Dayanand Shimoga, Siddhanth Gupta, Kidambi Srikanth ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Anmol Kharb, Aditi Bhatt, Devika Sihag, Shriyanshi Valishetty, Isharani Baruah ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>END<<<<<<